ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2491/49 - 2026 ජුනි මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.06.04

2491/49 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KEG/MWN/LAN/ACQUI/DI/21-V.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் இல.: 4-3/10/2011/UDA/201.

மாவனல்லை நகர அபிவிருத்தி சம்பந்தமாக விளையாட்டு மைதானம், நகர மண்டபம் வாகன தரிப்பிடம் மற்றும் சிறுவர் பூங்கா நிர்மாணிப்பதற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை பிரதேச செயலாளர் பிரிவில் 19, ரன்கொத்திவெல கிராமத்தில் அமைந்துள்ள கேகாலை சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் மு.பி.கே. 3832 மற்றும் 2022.06.30 ஆந் திகதிய வரைபடத்தில் குறிப்பிடப் பட்டுள்ள காணித்துண்டுகளின் முழு விஸ்தீரணம் 3.7181 ஹெக்டயார் கொண்ட காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 01**
காணியின் பெயர்: ருக்அத்தனேகும்புர, மீகஸ் கும்புர, வத்தகே கும்புர, பல்கட கும்புர, தெம்படாவ, கொஹொலன்பெல, முவன் கும்புர, மலதுல்ல கும்புர; உரிமை கோருபவர்: ஏ. டபிள்யூ. எஸ். சிபாயா, எம். ஆர். சித்தி சரீனா, எம். ஆர். கே. ஐனியா, எம். ஆர். சித்தி அயீஷா, வை. டி. பண்டார, எஸ். எம். லியாவுத்தீன், எச். எம். சிராஜ்டீன், எம். ரி. எம். ரிஸ்வான், எம். என். எம். ரிஷான், எம். அர்ஷாத், எம். ஜே. எம். இருபான் மற்றும் ஏனையவர்கள்; விஸ்தீரணம்: 3.7181 ஹெக்டயார்.

**துண்டு இல. 02**
காணியின் பெயர்: - ; உரிமை கோருபவர்: தேடிக்கொள்ள முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0051 ஹெக்டயார்.

1A - G 46927 — 28 (2026/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**துண்டு இல. 03**

காணியின் பெயர்: ருக்அத்தனேகும்புர; உரிமை கோருபவர்: எஸ். ஏ. ஸலாம்; விஸ்தீரணம்: 0.2137 ஹெக்டயார்.

**துண்டு இல. 04**

காணியின் பெயர்: - ; உரிமை கோருபவர்: வீதி அபிவிருத்தி அதிகார சபை; விஸ்தீரணம்: 0.0019 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாவனல்லை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் மேலும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப் பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வீ. ஓ. எல். எஸ். ரத்னசேகர,
பிரதேச செயலாளர்,
மாவனல்லை.

பிரதேச செயலகம்,
மாவனல்லை,
2026, மே 15.

EOG 06 - 0030